StudentBounty.com

# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM

## SUMMATIVE ASSESSMENT – I ( 2013-2014 )

DURATION : 3 HOURS　　TAMIL　　MARKS : 90

கால அளவு : 3 மணி　　தமிழ்　　மதிப்பெண்கள் : 90

CLASS : VI　　ஆறாம் வகுப்பு

## பகுதி-1

அ. கொடுக்கப்பட்ட பத்தியைப் படித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

நம்முடைய நாட்டின் தேசிய விலங்காகப் புலி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. புலி இந்திய நாட்டிற்கே உரிய சிறந்த வலிமை மிக்க விலங்காகும். புலி வீட்டில் வாழும் பூனையைப் போல தோற்றம் உடையது. ஆனால் அது காட்டில் வாழ்கிறது. புலியின் உடலில் பழுப்பு நிறக் குறுக்குப் பட்டைகள் அழகாக அமைந்துள்ளன. எனவே வரிப்புலி என்று கூறுகின்றோம். புலியின் பார்வை கொடுமையும் கூர்மையும் மிக்கது. கண்களோ பளிங்கு போன்று விளங்குகின்றன. மெத்தென்ற கால்களில் கூரிய நகங்கள் உள்ளன. வெள்ளை மீசை கொண்ட புலி நன்கு மோப்பம் பிடிக்கும் ஆற்றல் மிக்கது. 'புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது' என்பது பழமொழி. புலி மான் போன்ற விலங்குகளைக் கொன்று தின்னும்.

வினாக்கள் :　　10

1. புலியின் தோற்றம் எத்தகையது ?

2. நாம் எதனை வரிப்புலி என்று கூறுகிறோம் ?

3. புலியின் பார்வை மற்றும் கண்கள் பற்றி எழுதுக.

4. எத்தகைய புலிக்கு மோப்பம் பிடிக்கும் சக்தி உண்டு ?

5. புலியைப் பற்றிக் கூறும் பழமொழி யாது ?

ஆ. கடிதம் எழுதுக.　　8

1. உடல்நலமின்மையால் பள்ளிக்கு வர இயலாமை குறித்து வகுப்பு ஆசிரியருக்கு விடுப்பு விண்ணப்பக் கடிதம் எழுதுக.

( அல்லது )

2. சகோதரியின் திருமணம் காரணமாக பள்ளிக்கு வர இயலாமை குறித்து வகுப்பு ஆசிரியருக்கு இரு தினங்கள் விடுப்பு கேட்டு விண்ணப்பக் கடிதம் எழுதுக.



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

# பகுதி – 2

<u>அ.பொருத்தமான சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.</u> 3

1.உயிர்மெய் எழுத்துக்கள் மட்டும் இடம்பெறும் சொல்

அ.அம்மா ஆ.பானை இ.ஐந்து ஈ.கன்று

2.பெயர்ச்சொல்

அ.கண்ணன் ஆ.எழுதினான் இ.பாடினான் ஈ.வென்றான்

3.உரிச்சொல்

அ.ஆசிரியர் ஆ.சாலச் சிறந்தது இ.மாணவன் ஈ.வீட்டிற்குச் சென்றான்

<u>ஆ.பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.</u> 3

4.மெய்யெழுத்துக்கள் ____________ வகைப்படும்.

அ.இரண்டு ஆ.மூன்று இ.நான்கு ஈ.ஐந்து

5.தனிநிலை என்பது ____________

அ.உயிர் எழுத்து ஆ.மெய் எழுத்து இ.உயிர்மெய் எழுத்து ஈ.ஆய்த எழுத்து

6.பெயரையும் வினையையும் இடமாகக் கொண்டு வரும் சொல் ____________

அ.பெயர்ச்சொல் ஆ.வினைச்சொல் இ.இடைச்சொல் ஈ.உரிச்சொல்

<u>இ.அடைப்புக்குள் கூறியவாறு பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக</u> 3

7.ஆலயம் தொழுவது சாலவும் நன்று (உரிச்சொல்லை எடுத்து எழுதுக)

அ.நன்று ஆ.சாலவும் இ.ஆலயம் ஈ.தொழுவது

8.ஆபரணம் (உயிர் நெடில் எழுத்தை எடுத்து எழுதுக)

அ.ஆ ஆ.ப இ.ம் ஈ.ண

9.கோலம் (எவ்வகைச் சொல்?)

அ.பெயர்ச்சொல் ஆ.வினைச்சொல் இ.இடைச்சொல் ஈ.உரிச்சொல்

<u>ஈ.பொருத்தமான இலக்கணக் குறிப்பைத் தேர்ந்தெடுத்து எழுதுக.</u> 3

10.அம்மா

அ.உயிர்மெய் எழுத்து சொல்லின் இறுதியில் இடம் பெற்றுள்ள சொல்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

ஆ. உயிர்மெய் எழுத்து சொல்லின் இடையில் இடம் பெற்றுள்ள சொல்

இ. உயிர்மெய் எழுத்து சொல்லின் முதலில் இடம் பெற்றுள்ள சொல்

ஈ. உயிர்மெய் எழுத்து இடம் பெறாத சொல்

11.மாநகர்

அ.பெயர்ச்சொல் ஆ.வினைச்சொல் இ.இடைச்சொல் ஈ.உரிச்சொல்

12.இடைச்சொல்

அ.மாலதி ஆ.பாடினாள் இ.கடைக்குப் போனாள் ஈ.நனி மகிழ்ந்தாள்

உ.சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 3

13.அ.யானை என்பது ஈரெழுத்துச் சொல்

ஆ.யானை என்பது மூவெழுத்துச் சொல்

இ.யானை என்பது நான்கெழுத்துச் சொல்

ஈ. யானை என்பது இடைச்சொல்

14.அ.ஒருவன் செய்த செயலைக் குறிப்பது பெயர்ச்சொல்

ஆ.ஒருவன் செய்த செயலைக் குறிப்பது வினைச்சொல்

இ.ஒருவன் செய்த செயலைக் குறிப்பது இடைச்சொல்

ஈ.ஒருவன் செய்த செயலைக் குறிப்பது உரிச்சொல்

15.அ.உயிர்மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை - 12

ஆ. உயிர்மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை - 18

இ. உயிர்மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை - 216

ஈ. உயிர்மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை – 247

## பகுதி -3

அ.பொருள் கூறுக. 4

1.அறிஞர் 2.முல்லை நிலம்

3.இடும்பை 4.காவாக்கால்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

ஆ.பிரித்து எழுதுக. 4

1.சினங்காக்க 2.கருமேகம்

3.மரப்பொந்து 4.முரசறைந்து

இ.சேர்த்து எழுதுக. 4

1.பொன் +காசு 2.அ + மலர்

3.பயன் + உடைய 4.நன்மை + ஒழுக்கம்

ஈ.எதிர்ச்சொல் எழுதுக. 4

1.நன்று x 2.பொய் x

3.அருகில் x 4.வெற்றி x

உ.நிரப்புக. 4

1.எறும்பு சங்கின் எதிர்ப்புறம் வர ____________ வைக்கப்பட்டது.

2.செங்காந்தள் இதழ்கள் மீது உள்ள நீர்த்துளிகள் ____________ போல் காணப்பட்டன.

3.திருக்குறளை இயற்றியவர் ____________

4.எண்ணித் துணிக ____________

ஊ.தொடர் அமைக்க. 2

1.மணமிக்க

2.வெள்ளம்

எ.வருணித்து எழுதுக. 2

தேசியக்கொடி ( அல்லது ) சிங்கம்

ஏ.முதல் எழுத்தை மாற்றி வெவ்வேறு சொல்லாக்குக. 3

1.சுடும் - ____________ , ____________ , ____________

2.மறப்பது - ____________ , ____________ , ____________

## பகுதி -4

அ.கீழ்க்காணும் உரைநடைப் பகுதியைப் படித்து கேட்கப்பட்டுள்ள பல்விடை வினாக்களுக்கு விடை தருக



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

நிலம் குளிர்ந்தது ; கருமேகங்கள் மலையைத் தழுவிப் பெருமழையைக் கொட்டித் தீர்த்தன. எங்கும் வெள்ளம் .... வெள்ளம் .... ! முல்லைநில மக்கள் நீண்டு வளைந்த கோல்களைத் தம் கைகளில் வைத்திருந்தனர். அவர்கள் மேடான இடத்தை நோக்கிக் கால்நடைகளை ஓட்டிச் சென்றனர். நிலம் எங்கும் செக்கச் சிவந்த செங்காந்தள் மலர்கள் ; அவ்விதழ்களில் நீர்த்துளிகள் தூங்குவது போல் காணப்பட்டன. மக்களோ மிகுதியான குளிரால் வருந்தினர். கன்னங்களும் பற்களும் நடுக்கத்தில் கிடுகிடு என்று பறை கொட்டின.

<u>வினாக்கள்</u> 5

1.நீண்டு வளைந்த கோல்களைக் கைகளில் வைத்திருந்தவர்கள் ______________

அ.குறிஞ்சி நில மக்கள் ஆ.முல்லைநில மக்கள் இ.பாலைவன மக்கள்

2.செங்காந்தள் மலர்களின் நிறம் ____________

அ.வெள்ளை ஆ.கருப்பு இ.சிவப்பு

3.கன்னங்களும் பற்களும் நடுக்கத்தில் கிடுகிடு என்று பறை கொட்டக் காரணம் ____________

அ.மிகுந்த பயம் ஆ.மிகுந்த குளிர் இ.மிகுந்த காற்று

4.முல்லை நிலம் என்பது ______________

அ.காட்டு பகுதி ஆ.வயல் பகுதி இ.மலைப்பகுதி

5.கருமேகம் - பிரித்து எழுதுக ___________

அ.கருத்த + மேகம் ஆ.கரு + மேகம் இ.கருமை + மேகம்

<u>ஆ.பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.</u> 5

1.வேங்கை நாட்டுக்கு வந்த அறிஞர் பெயர்

அ.வேங்கை மார்பன் ஆ.செழியன் இ.நெடுமாறன்

2.சாம்பலில் கயிறு செய்தவர்

அ.அரசன் ஆ.அறிஞர் இ.மதிவாணன்

3.எது எப்போதும் துன்பம் தரும் ?

அ.நல்ல ஒழுக்கம் ஆ.தீய ஒழுக்கம் இ.நல்ல நட்பு

4.குறிஞ்சி நிலத்தை வருணித்துப் பாடியவர்

அ.பாரதிதாசன் ஆ.பாரதியார் இ.திருவள்ளுவர்

5.மகளிர் தம் செவிகளில் அணிந்திருந்த அணிகலன்

அ.வளையங்கள் ஆ.தோடுகள் இ.குண்டலங்கள்



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

இ.ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி. 8

1.அரசரின் ஆணை யாது ?

2.மதிவாணன் தன் தந்தையை எங்கே மறைத்து வைத்தான் ?

3.ஆடுமாடுகளை மேய்ப்போர் கால்நடைகளை எங்கே ஓட்டிச் சென்றனர் ?

4.தன்னெஞ்சே தன்னைச் சுடும் ஏன் ?

5.ஒழுக்கம் உடைமை – இவை பற்றி வள்ளுவர் கூறுவது யாது ?

ஈ.ஏதேனும் இரண்டிற்கு மட்டும் விரிவான விடை தருக. 8

1.சாம்பலில் கயிறு செய்தது எப்படி ?

2.பாரதிதாசன் குறிஞ்சி நிலத்தை எவ்வாறு வருணிக்கிறார் ?

3.திருக்குறள் - சிறு குறிப்பு வரைக.

உ.அடி மாறாமல் எழுதுக. 4

1.' நன்றிக்கு' - எனத் தொடங்கும் குறளை எழுதுக.

2.' சினம்' - என முடியும் குறளை எழுதுக.

*********************



StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers